பக்கங்கள் : ஆறு

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 12 புதன்கிழமை (25.04.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 149

# பலாலி படைத் தளப் பிரதேசம் மீது விடிகாலையில் புலிகள் வான் தாக்குதல்

## தரையிலிருந்து சுட்டு முறியடித்ததாக அரசு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 25

விமானத் தளத்தை உள்ளடக்கிய பலாலி கூட்டுப் படைத்தளப் பிரதேசம் மீது, விடுதலைப் புலிகளின் வான் புலிகள் நேற்று விடிகாலைவேளை குண்டுத் தாக்குதல் நடத்தினர்.

ஸ்ரீலங்கா நாட்டு வான் பரப்பினுள் அதிகாலை 1.20 மணியளவில் நுழைந்த புலிகளின் இரண்டு விமானங்கள் பலாலி படைத்தளத்தை இலக்குவைத்து குண்டுகளை வீசித் தாக்கியிருக்கின்றன.

முன்னரங்க நிலைகளில் இருந்த தரைப் படையினர் விடுதலைப் புலிகளின் விமானங்களை அவதானித்த உடனேயே பலாலி பெருந் தளத்தை உஷார்படுத்தியதுடன், தரையில் இருந்து விமானங்களை நோக்கி கடும் எதிர்த் தாக்குதல் நடத்தி புலிகளின் இலக்கை முறியடித்து விட்டனர் என்று இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

தாக்குதலை வெற்றிகரமாக நிறைவேற்றி விட்டு தமது விமானங்கள் பத்திரமாகத் தளம் திரும்பிவிட்டன என்று அறிவித்திருக்கும் விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர், குண்டு வீச்சினால் பலாலி பெருந்தளப் பிரதேசத்தில் பெரும் அழிவுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று தெரிவித்தார்.

புலிகளின் விமானங்கள் வீசிய குண்டுகள் பலாலி விமானத்தளம் அருகே அமைந்துள்ள மயிலிட்டிப் பகுதியில் படையினரின் பதுங்கு குழிகளைத் தாக்கியிருக்கின்றன. இதில் இராணுவத்தினர் சிலர் உயிரிழந்தும் காயமடைந்தும் உள்ளனர் என்று - பாதுகாப்பு அதிகாரிகளை மேற்கோள் காட்டி செய்தி ஏஜென்ஸிகள் அறிவித்திருந்தன. (05ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி விமானத்தளம் மீதான பாரிய தாக்குதல் தவிர்க்கப்பட்டது

### யாழ்.படைத் தளபதி தகவல்

யாழ்ப்பாணம், ஏப்.25

பலாலி விமானத் தளம் மீது மேற்கொள்ளப்படவிருந்த பாரிய தாக்குதல் தவிர்க்கப்பட்டுள்ளது என்று யாழ்.படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

பலாலித் தளம் பகுதி மீது நேற்று நடந்த வான் தாக்குதல் குறித்து அவர் செய்தியாளர்களிடம் இப்படிக் கூறினார்.

கொழும்பில் இருந்து அழைத்துவரப்பட்ட 15 செய்தியாளர்கள் சம்பவ இடத்தைப் பார்வையிட்டனர். மயிலிட்டி இறங்குதுறையில் இருந்து 500 மீற்றர் தூரத்தில் படையினரின் விடுதி அமைந்திருந்த பகுதியில் மூன்று குண்டுகள் வெடித்துச் சிதறியுள்ளன.

அந்த விடுதிக்கு முன்பாகவுள்ள வீதியில் ஒரு குண்டும் மற்றைய குண்டுகள் அந்த விடுதியுடன் அமைந்துள்ள தோட்டத்திலும் வீழ்ந்து வெடித்துள்ளன. விடுதியின் சுவர்கள் பலத்த சேதமடைந்திருந்தன.

செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றிய தளபதி சந்திரசிறி தெரிவித்ததாவது:-

பூநகரிப் பகுதியில் இருந்து ஆட்லறித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. அதன் பின்னர் வடமராட்சி கிழக்குப் பகுதி ஊடாக வந்த விமானங்கள் பிரதான முகாம், விமான ஓடுபாதை ஆகிய பகுதிகளில் குண்டுகளை வீச முனைந்தன.

வான் பாதுகாப்புக்காக ஏற்படுத்தப்பட்

(06 ஆம் பக்கம் பார்க்க)

## வான் தாக்குதல் சேதங்களை மதிப்பிட அமைச்சர்கள் குழு பலாலிக்கு விரைவு

கொழும்பு, ஏப். 25

வடக்கில் அரச படைகளின் விமானத் தளத்தை உள்ளடக்கிய பலாலி கூட்டுப் படைத் தளப் பிரதேசம் மீது விடுதலைப் புலிகளின் போர் விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதல் தொடர்பான உண்மை நிலையைக் கண்டறிவதற்காக நேற்று கொழும்பிலிருந்து அமைச்சர்கள் குழு ஒன்று யாழ்ப்பாணம் சென்றுள்ளது.

புலிகளின் விமானத் தாக்குதல் தொடர்பான உண்மையான நிலையைக் கண்டறிந்து வரும்படி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த பணிப்புரைக்கு அமைவாகவே அமைச்சர்கள் தலைமையிலான உயர்மட்ட அதிகாரிகள் குழு குடாநாட்டுக்குச் சென்றது.

ஊடகத்துறை பிரதி அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தலைமையில் அமைச்சர்களான ராஜித சேனாரத்ன, ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளே, பிரதி அமைச்சர் ஜகத் புஸ்பகுமார ஆகியோர் ஊடகவியலாளர்கள் சகிதம் நேற்றுக் காலை அங்கு சென்றனர்.

விடுதலைப் புலிகள் வான் தாக்குதல் நடத்திய இடங்களைப் பார்வையிட்ட இக்குழுவினர் பலாலி படைத்தளத்தில் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சந்திரசிறி தலைமையிலான படை அதிகாரிகளைச் சந்தித்து தாக்குதல் சம்பவம் தொடர்பாகக் கேட்டறிந்தனர் என்று கூறப்பட்டது.

நேற்று மாலை இக்குழுவினர் கொழும்பு திரும்பினர்.

அதன் பின்னர் இச்சம்பவம் தொடர்பாகக் கருத்து வெளியிட்ட ஊடகத்துறை

(06 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரிலிருந்து கொழும்பு வந்த பஸ் வவுனியாவில் கிளைமோரில் சிக்கியது!

### ஐந்து பயணிகள் உயிரிழப்பு! 37பேர் காயம்!!

வவுனியா, ஏப். 25

மன்னார் - மதவாச்சி வீதியூடாக கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த பயணிகள் பஸ் ஒன்று கிளைமோர் கண்ணிவெடியில் சிக்கியது. நேற்று முன்தினம் நள்ளிரவுக்குச் சற்றுமுன் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் பெண்பயணி உட்பட ஐந்து பயணிகள் உயிரிழந்தனர். சுமார் 37பயணிகள் காயமடைந்தனர்.

மன்னாரில் இருந்து கொழும்புக்குப் புறப்பட்ட இந்த பஸ், மன்னார் - மதவாச்சி வீதியில் ஆண்டியப்புளியங்குளம் பகுதியை அடைந்தபோதே அதன் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது என்று கூறப்படுகிறது.

தமிழர் மற்றும் முஸ்லிம்கள் உட்பட சுமார் 50பயணிகள் வரை அந்த பஸ்ஸில் இருந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த பயணிகள் உடனடியாக செட்டிக்குளம் மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்டனர். பின்னர் அங்கிருந்து நேற்று அதிகாலை அவர்கள் வவுனியா பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

(06 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடித்து வீடு சேதம்

யாழ்ப்பாணம், ஏப். 25

சுன்னாகம் பகுதியில் நேற்று அதிகாலை மர்மமான முறையில் குண்டொன்று வெடித்ததில் வீடு ஒன்று சேதமடைந்தது. வீட்டில் படுத்து உறங்கிக் கொண்டிருந்த மாணவன் ஒருவன் காயமடைந்தான்.

சுன்னாகம் கிழக்கு வாரியப்புலம் என்னும் இடத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பலாலி படைத்தளம் மீது விமானத்தாக்குதல் இடம்பெற்ற சில நிமிட நேரத்தில் இந்தக் குண்டு வெடித்துள்ளது என்று கூறப்படுகிறது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பைச் சேர்ந்த மாணவன் லோகன் என்பவரே காயமடைந்தார். அவரது வீட்டின் கண்ணாடிகள் சிதறின. வீட்டுச்சுவர்களும் சேதமடைந்தன.

இந்த வெடிப்பு எவ்வாறு ஏற்பட்டது என்பது தெரியவில்லை.

புலிகளின் விமானத்தை நோக்கி ஏவப்பட்ட விமான எதிர்ப்புப் பீரங்கிக் குண்டுகளில் ஒன்று வீட்டின் மீது வீழ்ந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. (அ - 68)

## வேவு விமானம் நோட்டம்

உடுப்பிட்டி, ஏப்.25

பலாலியையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் வேவு விமான் ஒன்று நேற்று முழுநாளும் நோட்டம் இடுவதில் ஈடுபட்டிருந்தது.

அத்துடன் அங்குள்ள கடற் பகுதியிலும் கடற்படையினரின் ரோந்து நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டிருந்தன. (அ -1-155)

## சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம்

சென்னை, ஏப்.25

இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்க வேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்து சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவுனர் மருத்துவர் ராமதாஸ், தமிழ் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பிரதிநிதிகள் உட்பட ஏராளமானோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் தமிழர்கள் பாதிக்கப்படும் நிலையில் இந்திய மத்திய அரசு இவ்வாறான நிலைப்பாட்டை மேற்கொள்ளுமானால் அது கண்டிக்கத்தக்க விடயம் என ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட தலைவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன்தமிழக (06ஆம் பக்கம் பார்க்க)



இலங்கை இராணுவத்துக்கு இந்தியா இராணுவ உதவியை வழங்குவதைக் கண்டித்து எஸ்.ராமதாஸ், பழ. நெடுமாறன் தலைமையில் சென்னையில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட படம்.

## புதுக்குடியிருப்பில் குண்டுவீச்சு வயோதியர் மரணம்

கிளிநொச்சி, ஏப்.25

புதுக்குடியிருப்பில் இயங்கும் செயற்கைக்கால் உற்பத்தி நிறுவனமான வெண்புறா அலுவலகம் மீது மிக் - 27 ரக விமானங்கள் நேற்றுத் தாக்குதல் நடத்தின.

நேற்றுப் பிற்பகல் 4.20 மணிமுதல் 15 நிமிட நேரம் நடத்தப்பட்ட இத் தாக்குதலில் வயோதிபர் ஒருவர் கொல்லப்பட்டார், பலர் காயமடைந்தனர்.

இத் தாக்குதலில் பல வீடுகள், வீதியில் சென்ற தனியார் பஸ் என்பனவும் சேதமடைந்தன. (அ-1)

## பயணிகள் விமானசேவைகள் நேற்று வழமைபோல்

கொழும்பு, ஏப். 25

பலாலி படைத்தளம் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் விமானத் தாக்குதல் நடத்திய போதிலும் வடபகுதிக்கான பயணிகள் விமான சேவைகள் அதனால் பாதிக்கப்படவில்லை என்று சம்பந்தப்பட்ட தனியார் விமானசேவை நிறுவனங்கள் தெரிவித்தன. வழமை போல் விமான சேவைகள் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

பலாலிக்கும் - இரத்மலானைக்கும் இடையே நேற்று நடைபெறவிருந்த பயணிகள் விமானசேவை தடையின்றி இடம்பெற்றதாக விமான நிறுவன வட்டாரங்கள் கூறின.

விமான சேவையை நிறுத்துமாறு கோரும் அறிவிப்பு எதுவும் பாதுகாப்புத் தரப்பிடம் இருந்து நேற்றுப்பகல் வரை கிடைக்கவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஏ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



திருமதி

**மகேந்திரம் சிவபாக்கியம்**

பிறப்பு 27.03.1947

இறப்பு 06.05.2006

திதி : 25.04.2007

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே
பாசத்தோடு பண்பையும் வளர்த்த
எங்கள் அன்புத் தெய்வமே
அரும் பெரும் சொத்தாகிய தாயே!
ஓராண்டென்ன எத்தனை
ஆண்டுகளானாலும் தாங்குமா - எம்
இதயம், தினம் ஏங்குகின்றோம்
உமை நினைத்து!

அம்பாள் கோவிலடி,
அளவெட்டி வடக்கு.
(c.50066)
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.

## தேவை

எமது நிறுவனத்திற்கு தையல் வேலை தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை.

கனகசபை,
றொசானி காமன்ஸ்
புற்றுநோயாளர்
ஆஸ்பத்திரி அருகில்,
சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம். (59817)

றொசானி காமன்ஸ்
263/1, இராஜகாரியார் லேன்,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சங்க யாழ். கிளையின் நிறைவேற்று உத்தியோகத்தர்
ச.சுகராஜன் அவர்களின் பாசமிகு தந்தை

**அமரர் சந்திரசேகரம்**

அவர்கள் 22.04.2007 அன்று இறைபதமடைந்தார். அன்னாரது மறைவிற்காக எமது கண்ணீர் அஞ்சலியையும் அவரது இழப்பால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபதையும் தெரிவித்து அவரது ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தலைவர், ஆளுநர் சபை உறுப்பினர்கள்,
உறுப்பினர்கள், ஊழியர்கள், தொண்டர்கள்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ
சிரேஷ்ட விரிவுரையாளர்
கலாநிதி திருமதி நித்தியலக்ஷ்மி தர்மசீலன்
அவர்களின் பாசமிகு தாய்

திருமதி

**திலகவதி சண்முகம்**

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விரிவுரையாளர்கள், ஊழியர்கள்,
முகாமைத்துவத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம். (59877)

## 4ஆவது வருட நினைவு நாள்

உருவாய் 26 * 04 * 1938



அருவாய் 26 * 04 * 2003

வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் கனகசபை அரசரத்தினம்** (ரிப்போட்டர்)

நீங்கள் இவ்வுலகை விட்டு நீங்கிய நாள் முதல்
உங்களை நினைக்காத நாள்களும் இல்லை
உங்களை வழிபடாத நாள்களும் இல்லை
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து - எமை
மண்ணில் நல்ல வண்ணம் நல்லாற்றுப்படுத்திய
உங்களை தெய்வமாகப் போற்றித் துதிக்கின்றோம்
என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

Mrs.I.Arasaratnam,
56, Thorndon Gardens, EPSON,
SURREY, KT 19 0QW, London, U.K.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(59874)

## கண்ணீர் அஞ்சலி

23.04.2007 அன்று காலமாகிய
எமது பாடசாலை அதிபர்
திருமதி த.கமலராஜா
அவர்களின் அன்புச் சகோதரன்

**த.ஆறுமுகம்**

அவர்களின் மறைவினால்
துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ கல்வியங்காடு இந்து தமிழ்
கலவன் பாடசாலை
(59895)

## மரண அறிவித்தல்கள்

### வயிரவன் நடேசன்

(ஓய்வுபெற்ற ஆசிரியர் )

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வயிரவன் நடேசன் நேற்று (24.04.2007) செவ்வாய்க்கிழமை கால மானார்.

அன்னார் இரத்தினத்தின் அன்புக் கணவரும் அன்பழகன் (சுவிஸ்), அன்பரசி (ஆசிரியர்), அன்பரசன் (சுவிஸ்), அன்பழகி (ஆசிரியர்), அறிவழகன் (செக்குடியரசு) ஆகியோரின் தந்தையும் அருந்தவராஜா (ஆசிரியர்), யேசுதாஸ் (ஆசிரியர்), ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி. (59898)

தகவல்
மனைவி,
பிள்ளைகள்.

### திருநாவுக்கரசு திருச்செல்வம்



ஓட்டுமடத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு திருச்செல்வம் நேற்று (24.04.2007) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் மல்லிஸ்வரியின் அன்புக் கணவரும் டயாவினி, கவிராஜ், கிசோன்ராஜ், தனுசராஜ், லவன்ராஜ், சுதன்ராஜ் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் சிவயோகம் (ஜேர்மனி),வரதராஜன், செல்வராணி(ஜேர்மனி), காலஞ்சென்ற மங்கையர்க்கரசி மற்றும் கலியுகராஜன் (நோர்வே), கமலேஸ்வரி, மகாலக்ஸ்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மின்னல்கொடி, முனிஸ்வரகாந்தன், ஜெயந்தி, சிவசுப்பிரமணியம், செல்வரட் ணம் ஆகியோரின் மைத்துனரும் ராஜி, ஜெகன், ராதிகா, கிரியா, கார்த்திகா, ராஜன், ஜெனா, தீபன், ரோஜன், கௌதிஸ், பவித்திரா, சோனியா, பிரியா, கோபி, யசோ, சுயந்தன், கவிதா,சிந்து,ராஜ்குமார் ஆகியோரின் மாமனும் றமேஸ் (யாழ்ப்பாண மாஸ்ரர்), மகேஸ் (மலேசியா), லதா (ஜேர்மனி), சுதா (நோர்வே), சபேஸ் (ஜேர்மனி), தினேஸ் (நோர்வே), ஜெலயா (நோர்வே), சதீஸ் (நோர்வே) ஆகியோரின் பெரியதந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2007) புதன்கிழமை மு.ப.10மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

50/1, அராலி றோட்,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்

**சின்னையா பத்மநாதன்**



தோற்றம் 18.04.1942

மறைவு 26.03.2007

கடந்த 26.03.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் விட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (25.04.2007) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (59872) குடும்பத்தினர்.

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**வீரசிங்கம் சகாயராஜா**

(சின்னமணி)

ஆண்டவன் படைப்பில் 22.11.1959

ஆண்டவன் அழைப்பில் 25.04.2003

அன்புக்கும் அரவணைப்புக்கும்
இருப்பிடமாய் இருந்த எங்கள்
ஒளி விளக்கே - எங்களுக்கு
துன்பத்தையும் துயரத்தையும்
தந்து விட்டுப் போய்விட்டீர்கள் - அப்பா
இன்றுடன் ஆண்டுகள் நான்கு ஆனதுவோ?
வேதனையோ விலகவில்லை - விழி தேடும் இடம் எல்லாம்
உம் விம்பமே தெரிகிறது
ஆண்டுகள் நான்கு தான் ஆனாலும்
அழியாது எம் பாசம், ஆறாது எம் சோகம்
என்றும் உங்கள் ஆத்மா அமைதி பெற்று
இன்புற கண்கள் தினம் சொரியும்
கண்ணீர்ப் பூக்களாலே அஞ்சலி செய்கின்றோம்.

உடுவில் வடக்கு.
உடுவில். (59819)

என்றும் உங்கள் நினைவில் வாடும் :
மனைவி, பிள்ளைகள்.

## நேர்முகப் பரீட்சை

யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதி நிறுவனத்தின் பிராந்திய ஆலோசகர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை

பதவி : பிராந்திய காப்புறுதி ஆலோசகர்.
தகைமை : க.பொ.த.(சா.தர)ப் பரீட்சையில் கணிதம் உட்பட போடங்களில்சித்தி
காலம் : 2007.04.28 (சனிக்கிழமை)மு.ப 9.30
இடம் :

யூனியன் அஷ்யூரன்ஸ் காப்புறுதி நிறுவனம்.
இல.139,
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.:- 021 222 3753.
0773107776
(59876)

## அந்தியேட்டி அழைப்பும் வீட்டுக்கிருத்தியமும்

தோற்றம் 20 * 02 * 1926



மறைவு 26 * 03 * 2007

**அமரர் நாகலிங்கம் நடேசன்**

(ஓய்வு பெற்ற விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர்)

அன்பின் திருஉருவே ஆருயிர் அப்பாவே
பண்பின் உறைவிடமே பழக்கத்தின் பொக்கிசமே
இவ்வுலகில் உங்கள் வாழ்வு நூறாண்டு என
நம்பியிருந்தோம் - ஆனால் நொடிப்பொழுதில்
எங்களையெல்லாம் விட்டுச்சென்றுவிட்டீர்கள்
உங்களின் பிரிவைத் தாங்காது தவிக்கின்றோம்
துடிக்கின்றோம் ஆறமுடியவில்லையே!

இன்று (25.04.2007) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

...சேரி நல்லூர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## ஈராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 28 * 06 * 1983



விண்ணில் 09 * 05 * 2005

**செல்வி தரணிகா யோகேஸ்வரன்**

(மாணவி, தரம் 5 கனகரெத்தினம் ம.வி)

எம் அழகிய கனவுகள் கலைந்தது - உன்
கள்ளமற்ற பேச்சு காதிலே ஒலிக்குது
சின்ன நடை நடந்து சிங்கார கொண்டைபோட்டு
நீ சிரித்து மகிழ்வதைப் பார்த்திருந்தோம் - உன் பிரிவால்
இதயம் இடிந்ததம்மா இருள் எம்மைச் சூழ்ந்ததம்மா
ஈராண்டு ஆகியும் தேறிட முடியாமல்
தேம்பிப் புலம்புகின்றோம்.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிழக்கில் புலிகளின் பலம் குறைந்துவிடவில்லை; வடக்கில் பெரும் தாக்குதலுக்கு ஆயத்தங்கள்

## ஐ.நா. அதிகாரிகள் வன்னி சென்று எவை குறித்துப் பேசினர், ஆராய்ந்தனர்?

**கடந்த வாரம் (22.04.2007ஆம் திகதிய) 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழில் பிரபல பாதுகாப்புத் துறை ஆய்வாளர் இக்பால் அத்தாஸ் எழுதி வெளியான பாதுகாப்பு நிலைவரம் சம்பந்தமான கட்டுரையின் தொகுப்பு இது.**

புதுவருடக் கொண்டாட்டங்கள் யாவும் ஓய்ந்த கையோடு எல்லோரது கவனமும் வடக்கு-கிழக்கில் பிரகடனப்படுத்தப்படாத முறையில் இப்போது இடம்பெற்றுவரும் 4ஆவது ஈழப்போர் மீதே மீண்டும் திரும்பத் தொடங்கியிருக்கிறது.

என்னதான் அதிகாரிகள் பீற்றிக்கொண்டாலும் பாதுகாப்புப் படைகளால் கிழக்கு மாகாணத்தை முழுமையாக இன்னமும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியவில்லை.

சில பகுதிகளில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு பெருமளவில் ஆள்கள் மற்றும் கருவிகள் வகைகளால் நட்டத்தை ஏற்படுத்தி அவர்களை அப்புறப்படுத்தி இருக்கிறார்கள் தான். ஆனால் பல நிலைகளில் இன்னமும் எதிர்ப்பு இருந்தே வருகின்றது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்த நிலைமை நீடிக்கிறது. திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் குறைந்த அளவில் எதிர்ப்பு இருந்தே வருகின்றது.

### புலிகளின் தந்திரோபாயம்

தள நிலைமைகள் உயர் மட்ட பிரசார செயற்பாடுகளினால் மறைக்கப்பட்டு வருகின்றன.

விடுதலைப் புலிகள் ஒரு தெளிவான நடைமுறையைத் தமது செயற்பாடுகளில் கடைப்பிடித்தே வருகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. ஒரு குறிப்பிட்ட இடத்தில் கவனம் செலுத்தி அங்கு படைகளை தாக்குதல் நடத்தும்படி செய்யும் தந்திரோபாயத்தை அவர்கள் கைக்கொள்கிறார்கள். ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்குத் தாவிக்கொள்வதன் மூலம் படையினரை கூடுமானவரை பரந்துபடச் செய்திருக்கிறார்கள்.

உண்மையில் களத்தில் செயற்படும் தளபதிகளுக்கும் படையினருக்கும் இதுஓர் ஆபத்தான நிலைமைதான் என்றாலும் தீர்மானத்தோடு அவர்கள் முன்நகர்ந்து கொண்டிருக்கிறார்கள்.

### மேலதிக வேலைப்பளு

ஒரு புறம் இடம்பெயர்ந்துள்ள 1,50,000 அகதிகளைஅதிகாரிகள் மீளக் குடியமர்த்தும் வரை பராமரித்துக் கொள்ளவேண்டியிருக்கின்றது. இவ்வளவு பெரிய எண்ணிக்கையான மக்களைப் பராமரிப்பது பெரும் பொருளாதார பாரமாக இருக்கும் நிலையில் படையினருக்கு இது மேலதிக வேலைப்பளுவாகவும்இருந்து வருகின்றது. இதன்காரணமாக விடுதலைப் புலிகளைத் தேடிச் சென்று அழிக்கும் செயற்பாடு வேகமிழந்துள்ளது.

வடக்கில் பாதுகாப்புப் படையினரின் தாக்குதல்களை எதிர்கொள்வதற்காக பெரும் பலான தமது வீரர்களை அங்கு நகர்த்தியுள்ள புலிகள் கிழக்கில் படையினரைக் கண்காணிப்பதற்குப் போதுமான வீரர்களை நிறுத்திவைத்துவிட்டே போயிருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

படையினர் மேற்கொண்டும் முன்னேறுவதைத் தடுப்பதற்காக மன்னம்பிட்டி, வாழைச்சேனை, சித்தாண்டி, செங்கலடி ஆகிய பகுதிகளுக்குள் புலிகள் தமது படையினரை ஊடுருவச் செய்துள்ளதாக கதை அடிபடுகின்றது. இதேவேளை, இப்பகுதியில் உயர் மட்ட இராணுவ அதிகாரிகளின் நடமாட்டங்களை அவதானிக்க வேவுபார்க்கும் புலனாய்வுப் படையினரை புலிகள் நகர்த்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

இப்பகுதிகளில் புலிகளின் நடமாட்டம் குறைந்துவிடவில்லை என்பதை அழுத்திக் கூறுவதற்கான ஒரு தாக்குதல் மிக விரைவில் நடைபெறக்கூடும் என்று எதிர்பார்க்கலாம்.

புதுவருட தினத்திற்குச் சில தினங்களுக்கு முன்னர் புலிகளின் பகுதிக்குள் ஊடுருவிய படை அணி ஒன்று மறைந்திருந்து தாக்கப்பட்டது. அப்போது கொல்லப்பட்ட ஏழு படையினரின் உடல்கள் சீருடைகளுடன் உழவு இயந்திரம் ஒன்றில் வைத்துக் கிளிநொச்சி வீதிகளில் கொண்டுசெல்லப்பட்டு பொதுமக்களுக்குக் காட்டப்பட்டன.

கைப்பற்றப்பட்ட இலகு இயந்திரத் துப்பாக்கிகள், ரொக்கட் லோஞ்சர்கள் மற்றும் வெடிபொருள்கள் பொதுமக்களுக்குக் காண்பிக்கப்பட்டன.

இதையடுத்து புலிகளின் வெளிக்கள நிலைகள் மீது தாக்குதல் நடத்த எத்தனித்த திறமைசாலிகள் என்று கருதப்பட்ட எட்டுப் படையினர் காணாமற்போயுள்ளனர். அவர்களைப் புலிகள் உயிருடன் பிடித்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

இதேவேளை, பாதுகாப்புப் படையினர் முன்னேறிவரக் கூடுமெனக் கருதப்படும் சகல வாயில்களையும் புலிகள் அடைத்து விட்டார்கள் என்று தெரியவருகின்றது. இந்த வகையில் பாதைகளைக் கண்காணிப்பதற்கு பொது மக்களை அவர்கள் அமர்த்தியிருக்கின்றார்கள். அதேசமயம் அரச தரப்புப் பகுதிகளுக்கு பொதுமக்கள் செல்லாமலும் தடுத்துள்ளார்கள்.

### படையினருக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினை

கடந்த வாரங்களில் மட்டும் சுமார் ஐம்பதாயிரம் மக்கள் புலிகள் பகுதியிலிருந்து வெளியேறி அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தற்காலிக இடங்களில் தங்கியுள்ளார்கள். இது படையினருக்கு ஒரு பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது. இந்த மக்களில் சிலர் புலிகள் தரப்பிலிருந்து தப்பிவந்த போராளிகளாகவும் இருக்கக்கூடும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. அதனால் இப்படியானவர்களை சரியாக அடையாளம் காண்பதற்கான முழுமையான விசாரணை ஒன்று நடைபெற்று வருகின்றது.

### மன்னார் - ஓமந்தைப் பகுதியில் கண்காணிப்பு

மன்னாருக்கும் ஓமந்தைக்கும் இடைப்பட்ட வடக்குப் பகுதியில் இராணுவ மற்றும் மக்கள் நடமாட்டங்களைக் கண்காணிக்குமாறு புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தமது உயர் மட்டப் பிரமுகர்களுக்கு கட்டளை விடுத்திருக்கின்றார் என்று தெரியவருகின்றது. சில வாரங்களுக்கு முன்னர் புலிகளின் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் பொட்டு அம்மான், அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.பி.தமிழ்ச்செல்வன் மற்றும் இராணுவத் தளபதிகதிகள் பால்ராஜ், சொர்ணம் முதலியவர்கள் அப்பகுதியில் முக்கிய நிலைகளுக்குச் சென்று திரும்பியிருந்தார்கள். இவர்கள் காயப்பட்டவர்களை அப்புறப்படுத்துவது தொடர்பான அம்சங்களை வாகனங்களைக் கொண்டு ஆராய்ந்துள்ளார்கள். பெண் பேராளிகள் காயமுற்றவர்களைப் பராமரிக்கும் முறைகளை ஆராய்ந்துள்ளார்கள். இத்தகவல்களை அப்பகுதியிலிருந்து வெளியேறும் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் இராணுவ உடையில் போராளிகள் ஊடுருவி வந்து தாக்குதல் நடத்தக்கூடும் என்று படையினர்எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

### புலிகளின் விமானப் பயிற்சி

வன்னிப் பகுதியில் புலிகளின் விமானம் பல தடவைகள் வானில் பறந்து பயிற்சி எடுத்துள்ளதாகத் தெரியவந்துள்ளது.

வெலிஓயா பகுதியில் பதவியாவுக்கு மேலாகவும் ஒரு தடவை விமானம் பறந்துள்ளமை தெரியவந்துள்ளது. வானிலிருந்து தரையில் இலக்குகளைத் தாக்கும் பயிற்சியும் இடம் பெற்றுள்ளதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### விமானக் கண்காணிப்புக்கு இரவில் பார்க்கும் கருவிகள்

அமெரிக்காவின் பசுபிக் பிரதேச படைப் பிரிவு (USPACOM) இங்கு 2002ஆம் ஆண்டு நடைத்திய ஓர் ஆய்வின் பின்னர் இலங்கை விமானப்படைக்கு இரவில் பார்கும் கண்ணாடிகள் (Night Vision Goggles) கொள்முதல் செய்யப்படவேண்டும். முதலில் ஹெலிக்கொப்டர்களுக்கும் பின்னர் சண்டை விமானங்களுக்கும் சண்டை விமான ஓட்டிகளுக்கும் இவை வாங்கப்படுவதை அந்நிறுவனம் சிபாரிசு செய்திருந்தது. இவைகள் கொள்முதல் செய்யப்பட்டதன் பின்னர் அவைகளைப் பாவிப்பது பற்றிய பயிற்சி ஆரம்பிக்கப்படவேண்டும் என்றும் அந்த அமைப்புத் தெரிவித்திருந்தது.

மேலும் தரையிலிருந்து விமானங்களைத் தாக்கக்கூடிய அபாயம் நீங்கும்வரை இந்த இரவுக் கண்காணிப்புச் சேவைகள் தொடர வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த யோசனை செயற்படுத்தப்பட்டிருந்தால் இரவில் யுத்த விமானங்களை செலுத்துவதில் இலங்கை விமானப் படை கணிசமான அளவு அனுபவத்தைப் பெற்றிருக்கும் ஒரு வேளை, மார்ச் 26ஆம் திகதி கட்டுநாயக்கா விமானத் தளம் மீது நடத்தப்பட்ட தாக்குதலையும் தடுத்திருக்க முடியும். அந்த அமைப்பு வழங்கிய அறிக்கை அப்படியே கிடப்பில் கிடந்து வருகின்றது.

கட்டுநாயக்கா தளம் மீது புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து பல்வேறு எதிர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு அவைகளில் சிலவற்றை வெளியிடுவது சாத்தியமில்லை.

அமைதி முயற்சிகளுக்கு இன்னமும் இடமிருக்கின்றதா என்பதை ஆராய்வதற்கு எடுக்கப்பட்டுவரும் புதிய நடவடிக்கைகளின் பின்னணியில் மேற்கண்ட நிலைமைகளும் உருவாகிவருகின்றன.

இதேவேளை, சில சிரேஷ்ட ஐ.நா. அதிகாரிகள் கிளிநொச்சிக்குப் போய்த் திரும்பியிருக்கிறார்கள். ஐ.நா. வளர்ச்சித்திட்ட வதிவிட ஒருங்கிணைப்பாளர் பிரெட்றிக் லியோன்ஸ், ஐ.நா. ஸ்தானிகராலய அகதிகளுக்கான வதிவிடப்பிரதிநிதி அமின் அவாட் ஆகியவர்கள் இதில் அடங்குவர்.

அமைதிப் பேச்சுக்கள் தொடர்பான புலிகளின் நிலைப்பாடு எப்படி இருக்கும் என்பதை அறிந்துகொள்ளவும் முயன்றிருப்பார்கள் என்று கருதப்படுகின்றது.

### கப்பல்களுக்கு அச்சுறுத்தல்

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையில் பயணம் செய்யும் கப்பல்களை தாக்குவார்கள் என்று புலிகள் ஏற்கனவே எச்சரித்திருக்கிறார்கள். பொதுமக்களையும் கப்பல்களில் பிரயாணம் செய்யவேண்டாமெனக் கேட்டிருந்தார்கள். இந்த இரு துறைமுகங்களுக்கிடையிலும் கடற்படைக் கலங்களைத் தாக்குவதற்குப் புலிகள் ஆயத்தம் செய்து வருகிறார்கள் என்ற புலனாய்வுத் தகவல்களை இது உறுதி செய்வதாகக் கருதப்படுகின்றது.

புலிகள் பெரும் எடுப்பில் ஒரு தாக்குதலை நடத்துவார்களானால் அரசு ஏ-9 பாதையைத் திறக்க வழி செய்வதாக அமையும் என்று புலிகள் கருதுவதாகத் தெரிகின்றது.

ஆனால் இராணுவ உயர் மட்டத்தில் இப்படியான நிலை ஒன்று உருவாக சாத்தியமில்லை என்ற கருத்தே நிலவுகின்றது. கப்பல் போக்குவரத்தில் கைவைப்பார்களானால் அவர்களுக்கும் வன்னியிலுள்ள மக்களுக்கும் பிரச்சினைகளை அதிகரித்துக் கொள்வதாகவே அது அமையும் என்று அரச தரப்பில் கூறப்படுகிறது. அதனையும் பொருட்படுத்தாது விடுதலைப் புலிகள் கப்பல் தாக்குதலை நடத்துவார்களாயின் வர்தகக் கப்பல்களின் போக்குவரத்தை முற்றாக நிறுத்துவதாக அல்லது தாமதப்படுத்துவதாக அமையும்.

### வத்திக்கானில் ஜனாதிபதி

இதற்கிடையில் அமைதிப் பேச்சுக்களில் அரசாங்கம் விருப்பம் இல்லாமல் இல்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருப்பது கவனத்துக்குரியது. வத்திக்கானில் பாப்பரசரைத் தரிசித்தன் பின்னர் வத்திக்கான் அரசின் செயலாளர் கர்தினால் தார்சிஸ்கோ பேர்டோனுடன் ஆலோசனை நடத்தியபோது இதை ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ஆனால் அப்படியான பேச்சுக்கள் அரசாங்கத்தின் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தினைப் பாதிப்பதாக இருக்காது என்றும் தெரிவித்துள்ளார்.


எல்லாவித நிலைமைகளும் தற்போது அமைதியை நோக்கி நகர்வதைவிடுத்து போர் சூழலையே எதிர்கொண்டு நிற்பது வெட்ட வெளிச்சமாகத் தெரிகின்றது. அடுத்துவரும் நாள்கள் இதை இன்னும் தெளிவாக எடுத்துக் காட்டும்.

**தொகுப்பு : நந்தன்.**

★

---

# ஜெயலலிதாவுக்கு மிரட்டல்: விடுதலைப் புலிகள் கண்டனம்



கிளிநொச்சி, ஏப். 24

தமிழ்நாடு முன்னாள் முதல்வரும் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச் செயலாளருமான ஜெ. ஜெயலலிதாவுக்கு கடிதம் மூலம் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:-

இந்தியா, தமிழ்நாடு அல்லது உலகின் எந்தவொரு நாட்டினதும் உள்விவகாரங்களிலும் தலையிடாது ஒதுங்கியிருக்கும் கொள்கையை தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றனர்.

விடுதலைப் போராட்ட இயக்கமாகிய நாம், எம்மை ஒடுக்கும் அரசாங்கமான ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் கீழ்த்தரமான பரப்புரைகளுக்கு முகம்கொடுத்து வருகின்றோம். ஒடுக்கப்படுகின்ற ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகத் தமிழ்நாட்டில் வளர்ந்துவரும் கரிசனையான நிலைமையை கட்டுப்படுத்தி விடலாம் என்றும் ஸ்ரீலங்கா அரசாங்கம் கருதுகின்றது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தால் இயக்கப்படும் சில சக்திகளால்தான் தமிழ்நாட்டில் சில முக்கிய தலைவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக நாம் நம்புகின்றோம்.

இத்தகைய முறைகேடான செயற்பாட்டை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். தமிழ்நாட்டு அரசியலில் எமது பெயரால் மேற்கொள்ளப்படும் இத்தகைய முயற்சிகள் குறித்து அவதானமாக இருக்குமாறு நாம் அன்புடன் வேண்டுகிறோம்.

தனி நபர்களும் ஊடகங்களும் இத்தகைய அநாமதேய கடிதங்களைப் பொருட்படுத்த வேண்டாம் என்றும் நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம். - என்றார் இளந்திரையன்.

---

# மட்டு. வெல்லாவெளியிலேயே முதற்கட்ட மீள்குடியமர்வு

கொழும்பு,ஏப்.25

மட்டக்களப்பு அகதிகளில் வெல்லாவெளிப் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட அகதிகளை இன்றிலிருந்து அடுத்த இரண்டு வாரங்களுக்குள் மீள்குடியமர்த்தி முடிப்பதென அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஏனைய பிரதேச செயலகப் பிரிவுகளுக்குட்பட்ட அகதிகளைக் கட்டங்கட்டமாகக் குடியமர்த்துவதென்றும் அப்பகுதிகளின் உட்கட்டமைப்பு வேலைகளைச் செய்வது என்றும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற அகதிகளை மீள்குடியமர்த்துவது தொடர்பான கூட்டத்திலேயே மேற்படி தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இந்த மக்களுக்கு விசேட குடும்ப அடையாள அட்டைகள் வழங்கும் பணியை துரிதப்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(சி)

# சிறிபதியின் பிணைமனு மீது நாளை நீதிமன்றம் தீர்ப்பு

தபால் திணைக்களத்தின் வாகனம் ஒன்றை முறையற்ற விதத்தில் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் அமைச்சரும், தற்போதைய நாடாளுமன்றஉறுப்பினருமான சிறிபதி சூரியாராய்ச்சியை பிணையில் விடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான தீர்ப்பை அவிசாவளை மேல்நீதிமன்றம் நாளை வழங்க உள்ளது.

[illegible] பிணையில் விடக்கோரித் தாக்கல் செய்யப்பட்ட மனுவைக் கடுவெல நீதிவான் நீதிமன்றம் நிராகரித்திருந்தது.

பிணையில் விடுவிக்கக் கோரும் மனு கடுவெல நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டதை அடுத்து அந்த உத்தரவை மீளாய்வு செய்யக் கோரும் பிணை மீளாய்வு மனு அவிசாவளை மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனு நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட பின்னர் அதன் மீது தீர்ப்பு வழங்குவது நாளைமறுதினம் 26ஆம் திகதிக்குத் தள்ளிவைக்கப்பட்டது. (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Vacancies @ IIS CITY CAMPUS

We are on the look out for confident and committed individuals with the necessary qualifications for the following positions.

**LECTURERS**

The Ideal candidate must hold a Masters Degree in Computer Science or Master of Business Administration in IT with minimum three years experience in IT.

Salary Rs. 20, 000.00 up wards.

**ASSISTANT LECTURERS**

The Ideal candidate who posses an IT Degree, HND or equivalent professional qualification should have good presentation skills while relevant experience will be preferred.

Salary Rs.12, 000.00 up wards.

**INSTRUCTORS**

Suitable young and energetic candidates possessing Diploma or Certificate from recognized Institutes here or abroad.

Salary will be paid according to their qualification and experience.

If you are confident that you satisfy the above requirements, please apply by sending your curriculum vitae along with the names, addresses and contact numbers of non-related referees to reach us within 10 days. Mark the post applied for on the top left hand corner of the envelope and address to.

The Manager - Human Resources
IIS CITY CAMPUS
# 200, Sivan Pannai Road, Jaffna.
Telephone No: 021-222 8060 E-mail: iiscc@sltnet.lk



## விற்பனைக்கு உண்டு

HP 1020 Laser Printer 22,500/=

மேலதிக பொருள்கள்
Computers and Accessories, Monitor, Printers, Scanner, Toners, Ribbons, UPS, Vcd Player, Woofer, CD's and etc.

**SDS Computer Services,**
125 A, Stanly Road, Jaffna.
T.P.No: 4590686.



கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கப்பல் மூலமாகவோ அல்லது விமானம் மூலமாகவோ உடனுக்குடன் உங்கள் பொதிகள் அனுப்பி வைக்கப்படும். மொத்த வியாபாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கிளியரின்ஸ் இல்லாத பொருள்களுக்கு M.O.D.பெற்று உத்தரவாதத்துடன் உடன் அனுப்பி வைக்கப்படும்.

தொடர்பு: **EURO GROUPS**
0773846998, 0114542190.


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



திருமதி
**கனகு சின்னப்பிள்ளை**

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 13-09-1922 | 22-03-2007 |

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியை இன்று (25.04.2007) புதன்கிழமை காலை 7 மணிக்கு வில்லூன்றிப் புனித தீர்த்தக்கரையிலும் நாளை மறுநாள் (27.04.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் வீட்டுக்கிருத்திய நிகழ்வு எமது இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு தங்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வளாக வீதி,
திருநெல்வேலி. (59843)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## நீர் சிந்தும் விழிகளுடன் 90 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



செல்வன் **குணரத்தினம் ஜெயேந்திரன் (ஜெயன்)**
(முகாமையாளர், நியூ வசந்தாஸ் பான்சி ஹவுஸ், யாழ்ப்பாணம்)

| புன்னகைசிந்த தாயின் மடியில் | கண்ணீர்சிந்த அவனடியில் |
|---|---|
| 27★12★1977 | 25★01★2007 |

அன்னையின் கருவறையில் உயிர் பெற்றாய்
மகாஜனக் கல்லூரியில் அறிவு பெற்றாய்
நியூ வசந்தாஸில் தொழில் பெற்றாய்
கணனியில் தேர்ச்சி பெற்றாய்
எல்லாச் சக்தியும் உன்னிடம் உண்டென்று மகிழ்ந்தோம்
மின்னாமல் முழங்காமல் இறைவனடி சேர்ந்ததேனோ
உன் ஆத்மசாந்திக்கு இறைவனை வேண்டுகின்றோம்
உன் நினைவால் துயருறும் அப்பா, அம்மா, அக்கா மற்றும் உறவினர்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

எங்கள் செல்வனின் துயரச்செய்தி அறிந்து உடன் வந்து சகல வழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது மனதார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தற்காலிக முகவரி:
இணுவில் வீதி,
சுதுமலை வடக்கு, மானிப்பாய். (59526)

சு.குணரத்தினம் குடும்பத்தினர்.
நிரந்தர முகவரி: விராங்கொடை,
தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை.

## கண்ணீர் அஞ்சலி



எமது கழக உறுப்பினரும், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவனுமாகிய இ.முரளிதரன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர்
**இராமலிங்கம் இராசசுந்தரம்**

அவர்களிற்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

(59887)
கொக்குவில் வளர்மதி
முன்னேற்றக் கழகம்,
வளர்மதி நிறைவாழ்வகம்.


# Direct Star

விசேட பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்
தொழில்வாய்ப்புகளை பெற்றுத்தரும் கற்கைநெறி

- Certificate in Information Technology
- Diploma in MS Office Application
- Diploma in Desktop Publishing
- Diploma in Computerised Accounting
- Diploma in Web Design

ACTOS — Member of Association of Computer Professionals
for All Courses Duration 3 months

Education Partner CSC Computer Education

- Diploma in Digital Pre-Press
- Diploma in Digital Video Production
- Diploma in PC Professional
- Diploma in Advanced Software Technology
- Diploma in Web Design & Development

மேலதிக விபரங்களுக்கு எமது பயிற்சி மையங்களை நாடுங்கள்

Tally Training — Authorised Academy

# ASIAN COMPUTER SYSTEMS

| யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் - CSC | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 5677 | 101,1ம் மாடி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021-222 8196 | கண்டி வீதி, சாவகச்சேரி. 077-3039587 | கொடிகாமம் ரோட், நெல்லியடி. 077-3122198 |


## கண்ணீர் அஞ்சலி



யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவி

**V.வனிதா**

அகாலமரணமடைந்துள்ளார்.
அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கலைப்பீடத்துறை,
(59888) 3 ஆம் வருட மாணவர்கள், யாழ்.பல்கலைக்கழகம்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 20 * 09 * 1945 | 25 * 03 * 2007 |



அமரர் **குமாரு வேலுப்பிள்ளை**

அப்பா! எங்களை விட்டு நீங்கள் பிரிந்தாலும் எங்கள் மனதை விட்டு நீங்கவில்லை
மறுபிறப்பென்பது உண்மையானால் மறுபடியும் நாம் சேர்ந்து வாழ்வோம்
இறைபதம் இருக்கின்ற திருவுருவே இருகரம் கூப்பி நிற்கின்றோம்
வாழும் காலம் வரை உங்கள் நினைவலைகளை சுமந்து வாழ்வோம்.

இன்று (25.04.2007) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அழைக்கின்றோம்.

குருந்தடித் தோட்டம்,
கரணவாய் மத்தி. (59842)

மனைவி, மகள், வே.யாழினி
(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்)

## தவறிவிட்டது

பெரிய நாவலடி, கொடிகாமத்தைச் சேர்ந்த நாகராசா சுதர்சினி ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (816023351v), விசேட அடையாள அட்டை, செஞ்சிலுவைச் சங்க அடையாள அட்டை என்பன கடந்த 2007.04.15 அன்று யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் கட்டப்பிராய்க்கும் இடையில் சென்று வரும் வழியில் தொலைந்துவிட்டன. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து எமக்குத் தந்துதவுமாறு மிகவும் தாழ்மையுடன்கேட்டுக் கொள்கின்றேன்.
ஒப்படைக்க வேண்டிய முகவரி
த.ஜெயசீலன்
விளையாட்டரங்க வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்,
கட்டப்பிராய்.

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1972 ஆம் ஆண்டு உத்தராடம் (4) Advance Diploma in E&E Engineering (London) தற்போது London இல் இருந்து வந்து கொழும்பில் தொழில் நுட்பவியலாளராக (தனியார்) தொழில் புரியும் எனது மகனுக்கு London அல்லது Australia இல் பிரஜா உரிமையுள்ள அல்லது உள்ளூரில் அரச அல்லது வங்கியில் தொழில் புரியும் பொருத்தமான மணப்பெண்தேவை. பூரணவிவரங்களுடன் தொடர்பு:
[illegible]

## 45ஆம் நாள் நினைவின் கண்ணீர்க் காணிக்கையும் நன்றி நவிலலும்



| மண்ணில் உதித்தல் | விண்ணில் உதித்தல் |
|---|---|
| 1969.09.04 | 2007.03.12 |

**அமரர் யோசெவ் பெல்டானோ லௌறென்சியா மரியசெல்வம்**

| | | | | |
|---|---|---|---|---|
| நானிலத்திலெமைத் | தவிக்கவிட்டு | நாற்பத்தைந்து | நாள் | ஆனதுவோ |
| பாவினத்திலொரு | வரியெழுத | வார்த்தைகள் | தான் | வந்திடுமோ |
| யாரினியெமை | தேற்றினாலும் | சோகமது | தான் | ஆறிடுமோ |
| பாரினத்திலெவர் | தோன்றினாலும் | உனக்குநிகர் | தான் | ஆகிடுமோ |

அன்னாரின் மரணச் செய்திகேட்டு நாம் துன்பத்தில் தவித்திருந்த போது உடன்வந்து பல வழிகளில் உதவிகள் பல புரிந்த அன்பு உள்ளங்களுக்கும் எமது இல்லத்துக்கு வருகைதந்து பணமாகவும் பொருளாகவும் உதவிகள் செய்த இரக்க இதயத்தோருக்கும் நேரடியாகவும் தொலைபேசி மூலமும் எம் துயரில் பங்குகொண்டோருக்கும் எமது ஆலயப் பங்கு மக்கள், யாழ். திருமறைக்கலாமன்றத்தினர், யாழ். பங்குமக்கள், தாமாக முன்வந்து வழிபாடு நடத்தி ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்த ஈர இதயம் கொண்டோருக்கும், பாடசாலைச் சமூகங்களுக்கும், மலர்வளையம் சாத்திய உள்ளங்களுக்கும் இறுதிவரை தோழோடு தோழ்கொடுத்து உதவிய அனைத்து உற்றார், உறவினர், நண்பர்கள், பெரியோர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

(59856)
அரசடி வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய்.
- குடும்பத்தினர்.
E-mail: jbjude_63@yahoo.com, charlespera@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., 222 3837, 222 9933 தொ.ந.: 222 9944

## ஆயுதம் வழங்குவதில் இந்தியா இரட்டை வேடம் போடுகிறதா?

பேரழிவு தரும் போராயுதங்களை இலங்கைக்கு, இந்தியா வழங்கியுள்ளது எனத் தெரிவித்து இணையத்தளம் ஒன்றின் ஊடாகக் கசிந்த தகவல், இந்தியாவில் அரசியல் சலசலப்பை உருவாக்கியிருக்கின்றது.

அயல்நாடு என்ற வகையில் இலங்கைக்குத் தற்காப்பு ஆயுதங்களை மட்டுமே வழங்குவோம், தாக்குதல் ஆயுதங்களையோ, பேரழிவு தரும் ஆயுதங்களையோ வழங்கமாட்டோம் என்றே புதுடில்லி அரசு இதுவரை வெளிப்படையாகக் கூறி வந்தது.

இலங்கை அரசுக்கு வழங்கப்படும் ஆயுதங்கள் ஈழத் தமிழர்களைக் கொன்றொழிக்கவே பயன்படுத்தப்படுகின்றன என்ற எரிச்சல் இந்தியாவில் - குறிப்பாக ஈழத்தமிழர் தாயகத்துடன் தொப்புள் கொடி உறவு கொண்டுள்ள தென்னிந்திய மாநிலமான தமிழகத்தில் - பரவியுள்ள நிலையில், தமிழக மாநில அரசையும் மக்களையும் சமாளிக்கும் விதத்தில் இத்தகைய நிலைப்பாட்டை எடுத்து அறிவித்திருந்தது புதுடில்லி. இந்தக் கொள்கை நிலைப்பாட்டையே அது பின்பற்றி வருவதாகவும் கூறப்பட்டது.

ஆனால் சர்வதேச விவகாரங்களில் - குறிப்பாக அயல் நாடுகளின் விடயங்களில் - வழமையாகவே தெளிவற்ற, இரட்டை வேட அணுகுமுறையைக் கையாளும் புதுடில்லி, இலங்கைக்கு ஆயுதம் வழங்கும் கைங்கரியத்திலும் இவ்வாறு 'சொல் ஒன்று செயல் வேறாக' நடந்துகொள்கின்றதோ என்ற சந்தேகம் இப்போது வலுப்பட்டிருக்கின்றது.

இலங்கை விவகாரத்தில் ஆரம்பத்திலிருந்தே புதுடில்லியின் கையாள்கை இப்படித்தான் இருந்து வந்திருக்கின்றது. எண்பதுகளின் நடுப்பகுதியில் ஈழத் தமிழ்ப் போராளிகள் குழுக்களுக்கு பரவலாக ஆயுதப் பயிற்சி முகாம்களை அமைத்து அவற்றுக்கு இராணுவப் பயிற்சிகளை வழங்கிக்கொண்டு, இந்தியாவில் போராளிகளின் பயிற்சி முகாம்கள் இல்லை, அகதிகளின் நலன்புரி முகாம்கள் மட்டும் தான் உண்டு என்று பகிரங்கமாகக் கூறியதிலிருந்து -

புலிகளின் மூத்த தளபதி கிட்டு பயணித்த 'அகத்' கப்பலை சர்வதேசக் கடற்பரப்பில் சுற்றி வளைத்து மடக்கி, இந்திய எல்லைக்குள் பலவந்தமாகக் கூட்டிவந்துவிட்டு, இந்தியக் கடல் எல்லைக்குள் வந்ததால் மடக்கிப்பிடித்தோம் என அறிவித்தமை வரை -

பல்வேறு விடயங்களிலும் புதுடில்லி போட்ட இரட்டை வேடம் மறக்கக்கூடியதல்ல.

இப்போதும் கூட, நாடாளுமன்றத்தில் தனித்து அறுதிப் பெரும்பான்மை பெறாத காங்கிரஸ் தலைமையிலான அரசு, தனது கூட்டணியில் உள்ள இடதுசாரிகளின் தயவில் தங்கித்தான் ஆட்சியைக் கொண்டிழுக்கின்றது. அப்படிச் செயற்படுவதால் சர்வதேச விவகாரங்களில் இடதுசாரிகளின் கொள்கை நிலைப்பாடுகளுக்கு மசிந்து -வளைந்து - வகுத்துச் செயற்படவேண்டிய இக்கட்டு அதற்கு. அதேசமயம், மத்திய கிழக்குப் பிரச்சினை போன்ற சர்வதேச சர்ச்சைகளில் உலக ஏகாதிபத்தியமான அமெரிக்காவின் அழுத்தத்துக்கும் அடிபணியவேண்டிய கஷ்டம் மறுபுறம். அதனால், பேச்சளவில் கொள்கை விவகாரத்தில் ஒரு போக்கையும் செயலளவில் நடைமுறையில் வேறு பாணியையும் கையாண்டு, தனது கூட்டணிக் கட்சிகளான இடதுசாரிகளோடு தினசரி அல்லாடிக் கொண்டிருக்கின்றது காங்கிரஸ் கட்சி தலைமையிலான புதுடில்லி அரசு.

இந்த நிலைமைதான் இலங்கை விவகாரத்திலும் போலும். ஈழத் தமிழர்கள் தொடர்பான தமிழகத்தின் உணர்ச்சிபூர்வ நிலைப்பாட்டைப் புறக்கணித்துச் செயற்பட்டால், தமிழகம் மத்திய அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழ, தமிழக எம்.பிக்களின் தயவில் ஆட்சியைக் கொண்டிழுக்கும் மத்திய அரசின்பாடு 'கோவிந்தா!' ஆகிவிடும்.

தமிழகத்தைக் கணக்கில் எடுத்து - தமிழக விருப்பப்படி - இலங்கை அரசுக்கு சார்பற்ற நிலைப்பாட்டைப் பின்பற்றினாலோ, அயல்நாடான இலங்கை புதுடில்லிக் கட்டுப்பாட்டைத் துறந்து விலகிச் சென்றுவிடும்.

ஏற்கனவே, பாகிஸ்தான் மற்றும் சீனா என்ற இரு பூச்சாண்டிகளை புதுடில்லிக்குக் காட்டிக் கொண்டு நிற்கின்றது கொழும்பு அரசு. உரிய உதவிகளை புதுடில்லி தர மறுத்தால் - பின்னடித்தால் - பாகிஸ்தான், சீனா ஆகிய இந்திய விரோத அயல் நாடுகளின் வலையில் போய் விழுந்துவிடுவோம் என மிரட்டுகின்றது கொழும்பு.

தனது தென்கோடி மூலையில் உள்ள இலங்கைத் தீவு மீதான பிடியை விட்டுக்கொடுக்கவோ, அங்கு சீனா மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகள் எல்லை மீறி ஆதிக்கம் செலுத்துவதை அனுமதிக்கவோ புதுடில்லி விரும்பவில்லை. அதன் காரணமாக இலங்கை விவகாரத்தைக் கையாள்வதிலும் தனது வழமையான இரட்டை வேடப்போக்கை பின்பற்றுகின்றது போலும்.

இலங்கைக்கு பேரழிவு தரும் போராயுதங்களை இந்தியா வழங்கியுள்ளது என்று கசிந்துள்ள செய்தி குறித்து புதுடில்லி இன்னும் உண்மையை உத்தியோகபூர்வமாகத் தெளிவுபடுத்தவில்லை. அவ்வாறான தெளிவுபடுத்தல் வெறும் - அதிகார மட்ட - மறுப்பாக அல்லாமல், இதுவரை வழங்கிய ஆயுத தளபாட வகைகளின் விவரத்தோடும் - விளக்கத்தோடும் - அமைய வேண்டும்.

வெறும் அறிக்கைகள், அறிவிப்புகள் போன்றவை இரட்டைவேடச் செயற்பாடு தொடர்பான சந்தேகங்களைப் போக்கப் போதுமானவை அல்ல என்பதையும் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

தமிழகத் தலைவர்கள் முக்கியமாகக் கவனத்தில் எடுக்கவேண்டிய அம்சம் இது.

## நாளை பயணப்பதிவுகள்

கொழும்பில் நடைபெறவுள்ள இலங்கை திட்டமிடல் சேவையின் வகுப்பு 2 தரம் 2 ஆள்சேர்ப்புப் பரீட்சைக்குச் செல்வதற்கென யாழ். செயலகத்தில் பயணத்துக்கான பதிவை இதுவரை மேற்கொள்ளாதவர்கள் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை செயலகத்தில் பதிவை மேற்கொள்ளலாம் என்று யாழ். மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி தெரிவித்துள்ளார். (1-202)

## பொருள்களின் விலைகள் திடீரென உயர்ந்தன

குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் நேற்றுத் திடீரென உயர்ந்தன.

அரிசி, சீனி, மா மற்றும் சவர்க்காரம், சம்பு போன்ற பொருள்களின் விலைகள் நேற்று அதிகரித்த விலையில் விற்பனையாகின. யாழ். நகரப் பகுதியில் மட்டுமல்லாது கிராமப் புறக்கடைகளிலும் பொருள்களின் விலைகள் அதிகரித்துக் காணப்பட்டன.

வடமராட்சியில் ப.நோ.கூ. சங்கக் கிளைகளுக்கு முன்பாக பெரும் எண்ணிக்கையானவர்கள் கியூவில் நின்று பொருள்களைக் கொள்வனவு செய்ததை அவதானிக்க முடிந்தது. (அ-1-155)

## வவுனியாவில் இரு சடலங்கள்

வவுனியா, ஏப். 25

வவுனியா நகரில் நேற்றுக் காலை இரண்டு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அவற்றில் ஒன்று வவுனியா பஸ் நிலையத்துக்கு அருகிலும் மற்றைய சடலம் வவுனியா முதலாம் குறுக்குத் தெருவிலும் மீட்கப்பட்டன என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

சடலங்களாக மீட்கப்பட்டோர் இயற்கையாக இறந்தனரா அல்லது கொலை செய்யப்பட்டார்களா என்பதை அறிய விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (சி)

## பல்கலை. ஊழியரின் போராட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.25

அனைத்துப் பல்கலைக் கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் நேற்றுக் குதித்தனர்.

யாழ். பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களும் இப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும் கடந்த ஒரு வருடமாக மாணவர்கள் இழந்த கல்வியை பெற்றுக்கொள்ள வசதியாக, தொண்டர் அடிப்படையில், பல்கலைக்கழக செயற்பாடுகள் பாதிக்காத வகையில் யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் சேவை புரிந்தனர். (அ-1-68-79)

## தமிழ் ஊடகங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு இதுவரை உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை

### சர்வதேச ஊடக நிலையத்துக்கு ரணில் மகஜர்

கொழும்பு, ஏப். 25

இலங்கையில் ஊடகவியலாளர்களும் ஊடக நிறுவனங்களும் சந்திக்கும் அச்சுறுத்தல்கள், நெருக்கடிகள், நேரடியான தாக்குதல்கள் என்பவற்றை விவரமாக விளக்கி விரிவான மகஜர் ஒன்றை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வியன்னாவைத் தளமாகக்கொண்டு இயங்கும் சர்வதேச ஊடக நிலையத்துக்கு அனுப்பிவைத்திருக்கிறார்.

'இலங்கையில் தொடர்ந்து அருகிவரும் ஊடக சுதந்திரம்' என்ற தலைப்பில் ஊடக சுதந்திரத்தின் நிலைவரத்தை விளக்கும் இக்கடிதத்தில் 'சுடர் ஒளி' மற்றும் அதன் சகோதரப் பத்திரிகையான 'உதயன்' உட்பட தமிழ் ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் எதிர்கொள்ளும் நெருக்கடிகளை தனியான பின்னிணைப்பு ஒன்றில் விவரமாக விளக்கியிருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

சர்வதேச ஊடக நிலையத்துக்கு அனுப்பப்பட்ட இந்தக் கடிதத்தின் பிரதிகளை ரணில் விக்கிரமசிங்க நேற்றுமாலை கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் வெளியிட்டார்.

அந்தக் கடிதத்தில் 'இணைப்பு - 2' என்ற பிரிவில் தமிழ் ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகள் பற்றித் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அறிக்கையின் விவரம் பின்னர் வெளியிடப்படும்.)

## பாதுகாப்புக்கு அரசு உறுதியளிக்காததால் 4 தமிழ் எம்.பிக்களின் மட்டு. பயணம் ரத்து!

கொழும்பு, ஏப்.25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அவர்களது பயணத்துக்கு அரசு ஹெலிக்கொப்டர் வசதி செய்து கொடுக்கவில்லை. இதனால் அந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டக்களப்பில் நேற்று இடம்பெற்ற மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் கலந்துகொள்ள முடியாமற்போனது.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு ஏற்கனவே மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசு அழைப்பு விடுத்திருந்தது.

ஆனால், தற்போது கொழும்பில் தங்கியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மட்டக்களப்புக்குச் செல்ல முடியாதவாறு அங்கு அவர்களது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகச் சுட்டிக்காட்டியிருந்தனர். அரசு அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்தி அங்கு சென்று கூட்டத்தில் கலந்து கொண்டு விட்டுத் திரும்புவதற்கு வசதியாக ஹெலிகொப்டர் வசதி செய்து தரவேண்டும் என்று அவர்கள் அரசிடம் எழுத்து மூலம் கேட்டிருந்தனர்.

இக்கோரிக்கையை உள்ளடக்கி கடந்த ஞாயிற்றுக்கிழமை நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட்டாகக் கையெழுத்திட்டு கடிதம் ஒன்றை ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பி வைத்திருந்தனர்.

இந்தக் கடிதத்திற்கு அரசு எந்த வித பதிலும் அளிக்காததால் தாங்கள் மட்டக்களப்புக்குச்சென்று கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை என்று மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட தமிழ்ப் பகுதிகளுக்கான அபிவிருத்தியைப் புறக்கணிப்பதற்காகவே அரசு தமது கோரிக்கையை நிராகரித்துள்ளது என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (சி)

## குடாக்கடலில் 8 தினங்களாக மீன் பிடித்தடை; 3 ஆயிரம் குடும்பங்கள் வருமானமின்றிப் பாதிப்பு

குடாக் கடலில் தொழில் செய்வதற்கு கடந்த எட்டுத் தினங்களாக மீனவர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இதனால் குருநகர், பாஷையூர், கொழும்புத்துறைப் பிரதேசங்களைச் சேர்ந்த சுமார் 3 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பெரும் கஷ்டத்தை எதிர்கொள்கின்றன.

மீனவர்கள் தொழிலுக்குச் செல்வதற்குத் தினமும் தயாராகச் செல்வதும் தமக்கு மேலிடத்திலிருந்து அனுமதி கிடைக்கவில்லை எனப் படையினர் திரும்பி அனுப்புவதும் கடந்த ஒரு வாரமாக வழக்கமாகிவிட்டதாகப் பாதிக்கப்பட்ட மீனவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இந்த நிலை தொடர்ந்தால், தமது குடும்பங்கள் பட்டினியை எதிர்கொள்ளும் அவலநிலை ஏற்படும் என்று மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குடாக் கடலில் மீன் பிடிக்கத் தடை விதிக்கப்பட்டதை அடுத்து மீன் சந்தைகளில் கடலுணவுகளின் விலைகள் மிகவும் அதிகரித்துள்ளன. (அ-202-51)

## தந்தை செல்வாவின் 30ஆவது நினைவுதினம் நாளை அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.25

தந்தை செல்வாவின் 30ஆவது நினைவு தின அஞ்சலி நிகழ்வு, நாளை வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். தந்தை செல்வா சதுக்கத்தில் இடம்பெறவுள்ளது.

தந்தை செல்வா அறங்காவலர் குழு உறுப்பினர் பொ. கனகசபாபதி தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் சர்வமதப் பிரார்த்தனை இடம்பெறும்.

மௌளவி ஏ.ஜி. முகமட் இர்பான், வண. பிதா ஆர். இரவிச்சந்திரன், ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோரின் அஞ்சலியுரைகளும் கலாநிதி குணராசாவின் வரவேற்புரையும் இடம்பெறும். (அ-1)

## தேடுதலில் கைதான எண்மருக்கும் பிணை

யாழ்ப்பாணம், ஏப்.25

யாழ். நகரத்தை அண்டிய பகுதிகளில் நேற்றுமுன்தினம் படையினரும் பொலிஸாரும் மேற்கொண்ட தேடுதலின்போது கைது செய்யப்பட்ட எட்டுப் பேரும் நேற்று யாழ். நீதிமன்றில் பொலிஸாரால் ஆஜர் செய்யப்பட்டனர்.

பிரஸ்தாப நபர்களை 15 ஆயிரம் ரூபா சீரப்பிணையில் செல்ல யாழ். மேலதிக நீதிவான் திருமதி எஸ். இளங்கோவன் அனுமதித்தார்.

இவர்களின் கைவிரல் அடையாளங்களை எடுத்தபின்னர் பிணையில் அனுமதிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

தேடுதலின்போது சந்தேகத்திற்குரிய வகையில் நடமாடியதாகத் தெரிவித்து படையினர் இவர்களைக் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்திருந்தனர். பொலிஸார் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர். (அ-1)

## சமய சந்நிதிகளில்...

யாழ்ப்பாணம், ஏப்.25

நல்லூர் கைலாசபிள்ளையார் ஆலய, பிள்ளையார் வாசல் பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது.

எதிர்வரும் முதலாம்திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (1-111)

* * *

யாழ்ப்பாணம், ஏப்.25

சாவகச்சேரி, சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் ஆலய பெருந்திரு விழா கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (1-202)

## பலாலி படைத்தளப் பிரதேசம் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

**மின்துண்டிப்பு**

விடுதலைப் புலிகளின் விமானங்கள் பருத்தித்துறைப்பகுதி ஊடாக வான் பரப்பினுள் நுழைந்தன என்று கூறப்படுகின்றது. விமானத்தின் இரைச்சலைக் கேட்டவுடன் முன்னரங்கில் கடமையில் இருந்த படையினர் பலாலி படைத்தளத்துக்கு எச்சரிக்கை விடுத்து அங்கிருந்த படையினரை உஷார்படுத்தியிருக்கின்றனர்.

உடனடியாகவே பெருந்தளப் பிரதேசத்திலும், யாழ். குடாநாட்டின் சகல பிரதேசங்களிலும் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. கையடக்கத் தொலைபேசிகளும் செயலிழந்தன.

**விடிய விடிய குண்டுச் சத்தங்கள்**

பலாலி தளப்பிரதேசம் மீது புலிகளின் தாக்குதல் ஆரம்பித்த கையோடு பெரும் வெடி ஓசைகள் கேட்கத்தொடங்கின. குடாநாட்டின் வலிகாமம், வடமராட்சி தீவகம் உட்பட எல்லாப் பிரதேசங்களிலும் சில மணிநேரமாக குண்டுச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

"முன்னரங்கத் துருப்பினர் அவர்களை (புலிகளின் விமானங்களை) கண்டவுடனேயே பலாலித் தளத்தை உஷார்படுத்தினர். சகல மின்விளக்குகளையும் அணைத்து விட்டு தரையிலிருந்து கடும் பீரங்கி மற்றும் கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டனர்." - என்று இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

வான் தாக்குதல் நடந்த சமயம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங்களில் இருந்து சமகாலத்தில் பலாலிப் படைத்தளம் நோக்கி கடும் ஆட்டிலறி ஷெல்வீச்சும் நடத்தப்பட்டது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. படையினரும் பதிலுக்கு ஷெல் தாக்குதல்களை நடத்தினர். இந்த ஷெல் சமர் காரணமாக குடாநாடு சில மணிநேரம் அதிர்ந்தது.

**குடாநாடு அதிர்ந்தது**

நேற்று அதிகாலை 1.20 மணியளவில் வான் பரப்பில் வித்தியாசமான ஓசை கேட்டு நித்திரையில் இருந்த மக்கள் திடுக்கிட்டு எழுந்தனர். என்ன நடக்கப்போகிறதோ என்ற அதிர்ச்சியுடனும் பீதியுடனும் இருந்தனர். தொடர் ஷெல் வீச்சுச் சத்தங்களும், பல்குழல் எறிகணைத் தாக்குதல்களும் கேட்ட வண்ணம் இருந்தன. வானத்தை நோக்கி லேசர் குண்டுகள் ஏவப்பட்டதை பார்த்த பலரும் அச்சத்துடன் பொழுதைக் கழித்தனர். மீண்டும் ஒகஸ்ட் 11ஆம் திகதி போன்ற நிலை வந்துவிட்டதோ என்று நினைத்தனர்.

மின்சாரம் துண்டிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து வெடிச் சத்தங்களும் பீரங்கி ஓசைகளும் கேட்ட வண்ணம் இருந்தன. மக்கள் பதற்றத்[illegible]

அதிகாலை 4.30 மணியின் பின்னரே பலாலி விமானத் தளம் மீது தாக்குதல் நடத்தப்பட்டதை அவர்களால் ஊகிக்க முடிந்தது.

**ஆயுதக்களஞ்சியங்களுக்கு சேதம் என அறிவிப்பு**

தாங்கள் இரண்டாவது தடவையாக விமானத் தாக்குதல் நடத்தியிருப்பதை உறுதிப்படுத்தியிருக்கும் விடுதலைப் புலிகள், பலாலி பெருந்தளப் பிரதேசம் மீது பத்துக்கு மேற்பட்ட குண்டுகள் வீசப்பட்டன என்று தெரிவித்திருக்கின்றனர்.

தங்களது விமானி ஒருவரது தகவலின்படி குண்டு வீசப்பட்ட கையோடு பலாலி தளப்பிரதேசத்தின் ஓர் இடத்தில் இருந்து தீச்சுவாலையும் கரும் புகையும் தென்பட்டதாகவும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினருக்கும், அவர்களது ஆயுதக் களஞ்சியங்களுக்கும் நேற்றைய தாக்குதல் மூலம் பலத்த சேதங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்றும் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

**முதலில் வெளியாகிய முரண்பட்ட தகவல்கள்**

நேற்று அதிகாலை புலிகளின் வான் தாக்குதல் நடைபெற்ற பின்னர் அரச பாதுகாப்பு ஊடகத் தகவல் நிலையம் அதனை மறுத்தது. விடுதலைப் புலிகள் பூநகரிப் பிரதேசத்தில் இருந்து பலாலித் தளம் மீது ஆட்டிலறி ஷெல் வீச்சையே நடத்தினர் என்று ஊடக நிலையம் தெரிவித்தது. எனினும் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சரத்பொன்சேகாவை மேற்கோள் காட்டி பின்னர் வெளியிடப்பட்ட செய்திகள் வான் தாக்குதலை உறுதிப்படுத்தின.

"பலாலி அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் செவ்வாய்க்கிழமை அதிகாலை 1.15 மணியளவில் விடுதலைப் புலிகளின் இலகுரக வானூர்தி உள்நுழைய முயன்றது. அதனை இராணுவத்தினர் முறியடித்தனர்.

"பருத்தித்துறை கடற்பரப்பிலிருந்து அந்த வானூர்திகள், பலாலிக்கு வந்தன. பாதுகாப்பு எச்சரிக்கை சாதனங்கள் உடனே இயக்கப்பட்டன. தாக்குதல் வானூர்திகளை நோக்கி வானூர்தி எதிர்ப்பு தளபாடங்கள் நிறுத்தப்பட்டன. அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் தாக்குதல் எதுவும் நடத்தாமல் தாக்குதல் நடத்த வந்த விமானங்கள் திரும்பியுள்ளன.

"இருப்பினும், திரும்பிச் செல்லுகையில் மயிலிட்டி கடற்பரப்பில் வெடிபொருள்களை வீசிச்சென்றுள்ளன.

"இதனிடையே பூநகரியிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் எறிகணைத் தாக்குதல் நடத்தினர். இதற்கு இராணுவத்தினர் பதில் தாக்குதல் நடத்தினர். 6 இராணுவத்தினர் படுகாயமடைந்தனர்." - இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. எனினும், மயிலிட்டியில் பதுங்குகுழிகள் மீது புலிகளின் விமானங்கள் குண்டு வீசியதில் ஆறு படையினர் கொல்லப்பட்டும் 13 படையினர் காயமடைந்தும் உள்ளனர் என்று இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் கடந்த மாதம் 26ஆம் திகதி கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்துக்கு அருகே அமைந்திருக்கும் விமானப் படைத்தளம் மீது தங்களது முதலாவது வான் தாக்குதலை நடத்தியிருந்தமை தெரிந்ததே. (அ-சி)

## நாளை

சித்திரை - 13
வியாழக்கிழமை
26.04.2007
திதி: நவமி
காலை : 06.01
நட்சத்திரம்: ஆயிலியம்
காலை : 06.58
சுபநேரம் : 07.29 - 08.59
ராகுகாலம் : [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அணிக்கு 289 ஓட்டங்கள்

ஜமேய்க்கா,ஏப்.25

உலகக் கிண்ணக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில், இலங்கை அணிக்கும் நியூஸிலாந்து அணிக்கும் இடையில் நேற்றிரவு இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத் தாடிய இலங்கை அணி 5 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 289 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை அணியின் கப்டன் மஹேல ஜெயவர்த்தனா ஆட்ட மிழக்காமல் 109 பந்துகளில் 115 ஓட்டங்களைப் பெற்றார்.

செய்தி அச்சுக்குப் போகும்போது நியூஸிலாந்து அணி 10 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 30 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருந்தது.


## யாழ்.மக்களுக்கான விசேட சலுகை!

★ கையடக்கத் தொலைபேசிகள் உத்தரவாதத்துடன் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளவும்

(தமிழில் தகவல்களை பரிமாறக் கூடிய வசதிகள் உண்டு.)

★ GSM மேசைத் தொலைபேசிகள்

★ கையடக்கத் தொலைபேசி உதிரிப் பாகங்கள் என்பவற்றை பெற்றுக் கொள்ளவும்

★ சிறந்த முறையில் கையடக்கத் தொலைபேசிகளை பழுது பார்த்திடவும் நாடவேண்டிய இடம்




நியூ பவர் செலுலர் ட்ரேடிங் கம்பனி

205/01, கஸ்தூரியார் றோட், யாழ்ப்பாணம்
(ராஜா தியேட்டருக்கு அருகில்)
தொலைபேசி: 0773 518330
0776660289



## விற்பனையாகின்றன! புதிய பாடநூல்கள்

* பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை கற்போருக்கான புதிய பாட நூல்கள் ஒரே இடத்தில் விற்பனையாகின்றன!

இடம்: யாழ்.மத்திய கல்லூரி கேட்போர் கூடம்
(தம்பர் மண்டபம்- 3ஆம் மாடி)

காலம்: இன்று (25.04.2007) முதல் 06.05.2007 வரை

நேரம்: காலை 8.30 மணி முதல் பி.ப 3 மணிவரை

வியாபாரிகள், பாடசாலைகள், பொது நிறுவனங்கள் அனைத்துக்கும் குறித்த விலையில் 10% கழிவு வழங்கப்படும்.

தொடர்பு:

ஸ்ரீலங்கா புத்தகசாலை
234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2573


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
08
*
11
*
1927



மறைவு
26
*
03
*
2007

**திருமதி நடராசா ஞானபூரணம்**

(சுவாமியார் வீதி, கொழும்புத்துறை)

கடந்த 26.03.2007 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (25.04.2007) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பாதாள வைரவர் கோவிலடி,
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு. (58957) குடும்பத்தினர்.

## ஆத்ம சாந்தி அஞ்சலி நிகழ்வு



அமரர் மருதப்பு நடராசா (உரிமையாளர் - ரதி வாச் வேக்ஸ், ஸ்ரான்லி பேணிசிங் பலஸ்) அவர்களின் மகன்

அமரர்

**ந.இராசகுலசிங்கம்**

(தொழிலதிபர்- ரதி கண்ணாடி அகம், இல.5, 7 ஸ்ரான்லி வீதி)

தோற்றம் 10.12.1954 மறைவு 06.05.2006

திதி: பூர்வநவமி 25.04.2007

பாசமலர் ஓய்ந்து போனதென்ன!
வாசமலர் காய்ந்து விட்டதென்ன!
நேசக்கரம் நீட்டிய தேவன் இங்கு
மோசம் செய்த மாயம் என்ன!

இன்று (25.04.2007) புதன்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் அன்னாரின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்தி அஞ்சலி நிகழ்வு நடைபெறும்.

பிறவுண் வீதி,
இல.6, 2ஆம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (59864) குடும்பத்தினர்.

## சென்னையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முதல்வர் மு.கருணாநிதி உடனடியாக இது விடயத்தில் தலையிட வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டோர் கோரிக்கை விடுத்தனர். (அ-ரி)

## பலாலி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டுள்ள ஒழுங்கமைப்புக் காரணமாக அந்தப் பகுதிகளில் குண்டுகளை வீச முடியவில்லை. படையினர் உஷாரடைந்து உடனடியாகச் செயற்பட்டதால் பாரிய தாக்குதல் தவிர்க்கப்பட்டது.

வழமையாக, நாளாந்தம் நடைபெறும் நிகழ்வுகளில் ஒன்றுதான் இத்தாக்குதலும்.

இத் தாக்குதலில் 6 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 13 படையினர் காயமடைந்தனர் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-1)

## மன்னாரிலிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோசமான காயங்களுக்கு இலக்கான பயணிகள் பின்னர் வவுனியா மருத்துவ மனையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

உயிரிழந்தவர்களில் பஸ் நடத்துநர் பிரசாத் என்பவரும் அடங்குவார் என்று தெரிவிக்கப்படுகிறது. பலியான ஏனையோரின் விவரங்கள் உடனடியாகத் தெரியவில்லை.

வவுனியா பகுதியில் அண்மையில் பயணிகள் பஸ்மீது நடத்தப்பட்ட இரண்டாவது மோசமான கிளைமோர் தாக்குதல் சம்பவம் இது வாகும்.

இத்தாக்குதல் காரணமாக பஸ் பயணிகளிடையே பீதி ஏற்பட்டிருக்கின்றது.

வவுனியா பொலிஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர். (சி)

## வான் தாக்குதல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரதி அமைச்சர் - "புலிகளின் விமானங்கள் பலாலி படைத்தளம் மீது தாக்குதல் நடத்துவதற்கு வந்தபோது அதனைப் படையினர் வெற்றிகரமாக முறியடித்துவிட்டனர். பலாலி படைத்தளத்திற்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை. மயிலிட்டிப் பகுதியிலுள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது மூன்று குண்டுகளைப் போட்டுள்ளனர்.

பதுங்கு குழிகளில் இருந்த படையினர் வெளியே வந்து புலிகளின் விமானங்களை நோக்கி தாக்குதல் நடத்தியவேளை அவர்கள் மீது புலிகளின் விமானங்கள் குண்டு வீசின. அதில் ஆறு படையினர் கொல்லப்பட்டுள்ளனர்" - என்று தெரிவித்தார். (அ-சி)


அமைதியான சூழலில்...

## எடிசன் அக்கடமி
யாழ்ப்பாணம்

**O/L DAY CLASS**

பிரிவு 2 ஆரம்பம் 25.04.2007 8.30

| | |
|---|---|
| கணிதம் | - B.P.பாஸ்கரன் |
| | P.சிவகுமார் |
| | T.ரவீந்திரன் |
| விஞ்ஞானம் | - இரா.செல்வவடிவேல் |
| சமூகக்கல்வி | - R.S.சந்திரன் |
| தமிழ்/சமயம் | - பண்டிதர் வேலாயுதபிள்ளை |
| ஆங்கிலம் | - S.சுதர்ஷன் |
| | B.சுபாஷ் |
| விவசாயம் | - விக்கி |
| வர்த்தகம் | - S.சந்துரு |

* தூர இட மாணவர்களின் நன்மை கருதி பிரிவு - 2 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.
* கணிதத்தில் சித்தியடையாத மாணவர்களுக்கு விசேட வகுப்புகள்.

நிர்வாகி B.P.பாஸ்கரன்.



## இலவசக்கணனிப்பயிற்சி

ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனம் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளது.

MCS Supported By UNDP/JRRP

விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் 28-04-2007 முன் நேரில்

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
(பரமேஸ்வராசந்தி அருகே)


## கண்ணீர் அஞ்சலி



புதிய உயர் கல்லூரியின்
இந்து நாகரிக
விரிவுரையாளர்
திருமதி எஸ். அருள்நங்கை
அவர்களின் அன்புத் தாய்
**இராஜரட்ணம் விஜயலக்சுமி**
அவர்களின் மரணச் செய்திகேட்டு
துயரடைவதுடன் அவரின்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபத்தையும்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

இயக்குநர் - ஆசிரியர்கள்
பொருளியற்கல்லூரி -
யாழ்ப்பாணம், இணுவில்.
BARATHY - சித்தன்கேணி.

# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் கனகராஜர்

(முன்னாள் வர்த்தகர்)



வல்லை வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கனகராஜர் 20.04.2007 வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம், தங்கேஸ்வரி ஆகியோரின் மூத்த மகனும் சரஸ்வதிதேவியின் கணவரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம், சிவக்கொழுந்து (வட்டுக்கோட்டை) ஆகியோரின் மருமகனும் நடேசலிங்கத்தின் (ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ், சங்கானை) சகோதரனும், சரவணபவன், மதியழகன் (யாழ்-போதனா வைத்தியசாலை), கஜநேசன், பிரபாஜினி ஆகியோரின் தந்தையும் சுகந்தி, தனுஷியா, நந்தகுமார் ஆகியோரின் மாமனும் திவிகனின் பேரனும், இராஜேஸ்வரியின் மைத்துனரும் ஜெகதா, ஜெகதீபன், ஜெகவதனா, கோபிநாத் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலை யில் இன்று புதன்கிழமை மு.ப11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரையும் ஏற்றுக் கொள்ளவும்.

குறிப்பு: இன்று அன்னாரின் சங்கானை இல்லத்தில் துக்க நிகழ்வு அனுஷ்டிக்கப்படும்.

தகவல்: குடும்பத்தினர்

வல்லை வீதி, சங்கானை
தொ.பே: 0773838689, 0776660422

## நமசிவாயம் ராஜகோபால்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - இலங்கை வங்கி)

துன்னாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் ராஜகோபால் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்- இலங்கை வங்கி) இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
காந்திமதி (ஓய்வுபெற்ற ஆசிரியை), சாரதலீலா
சிவபாலன் (இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.)

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.
தொ.பே: 2226348

## அம்பலவாணர் சாந்தலிங்கம்

புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சாந்தலிங்கம் நேற்று (24.04.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் மற்றும் நாகம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் கமலாதேவியின் கணவரும் இராசரத்தினம் (கனடா), ஜெயலட்சுமி (பாக்கியம்) காலஞ்சென்ற சீவரத்தினம் மற்றும் சண்முகராஜா ஆகியோரின் சகோதரரும் சாந்தகுமார், சாந்தினி, வசந்தினி, வளர்மதி, தவக்குமார், கமலினி, தமிழினி, யாழினி ஆகியோரின் அன்புத் தந்தையும் ரேகா, ரூபன், ஆனந்தன், கேதீஸ், சசி, குமார், லிங்கன், கரன் ஆகியோரின் மாமனுமாவார். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பாக்கியம் (சகோதரி).

க. மருதலிங்கம், கச்சாய்வீதி,
சாவகச்சேரி, தொ.பே. 0773611236, 0776110160.

## திருமதி இராசரத்தினம் விஜயலட்சுமி (சோதி)



ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் மூத்த விநாயகர் கோயில், சங்கரப்பிள்ளை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசரத்தினம் விஜயலட்சுமி நேற்று (24.04.2007) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் மனைவியும் அருள்நங்கை (நிர்வாகி- புதிய உயர் கல்லூரி), பாலபாஸ்கரன், காலஞ்சென்ற அருள்வேல் மற்றும் கமலாம்பிகை (பிரான்ஸ்), ராஜநங்கை (ஆசிரியை - மானிப்பாய் மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற செந்தில்குமார் ஆகியோரின் அன்புத் தாயும் சண்முகநாதன் (இயக்குநர், புதிய உயர் கல்லூரி), ராஜீ, செல்வரஞ்சன் (பிரான்ஸ்), சிவபாலன் ஆகியோரின் மாமியும் அன்னலட்சுமியின் சகோதரியும் காலஞ்சென்ற மதியாபரணத்தின் மைத்துனியும் கிருஸ்ணகுமார், கிருஸ்ணவேணி, உதயகுமார் ஆகியோரின் பெரிய தாயும், மதுரா, சிவகேதீஸ்சன் (லண்டன்), பாலமயூரா (ஆசிரியர் கலாசாலை - கோப்பாய்), பாலரஜீவன் (ஆசிரியர் கலாசாலை - பலாலி), சந்துதன், சிந்துயன், விதுஷன், சர்மிளா, ஜெயந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பேத்தியும் நாகநவீனன் (லண்டன்) பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2007) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரையாம்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: S.அருள்நங்கை (மகள்).

லக்மி, சங்கரப்பிள்ளை வீதி,
ஆனைக்கோட்டை. (59913)

## திருமதி இரத்தினம் இராசம்மா



அரியாலையைச் சேர்ந்த திருமதி இரத்தினம் இராசம்மா நேற்று (24.04.2007) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பி ஐயா - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் தபால் உத்தியோகத்தர் காலஞ்சென்ற கணக்கர் இரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இரஞ்சிதமலரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான கோவிந்தசாமி, கனகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் கந்தையா மயில்வாகனம் (முன்னாள் மாவட்ட முகாமையாளர் - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, திருகோணமலை, தற்போதைய மாவட்டக் கணக்காளர், NEHRP , கச்சேரி, யாழ்ப்பாணம்) மற்றும் திருமதி திலகாசிவம் (லண்டன்) ஆகியோரின் மாமியும், மைதிலி (HNDM III - மாணவி, ATI யாழ்ப்பாணம்), வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளான பாலசாயினி, கிஷாந்தினி ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2007) புதன்கிழமை இல. 45, மலர்மகள் வீதி, அரியாலையில் அமைந்துள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: க. மயில்வாகனம் (மருமகன்).

இல. 45, மலர்மகள் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) [illegible] யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.04.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org